Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 21-2-1985 வியாழக்கிழமை (மாசி 10 – ஜ: அவ் 30) முழக்கம் 17

## இஸ்ரேல் - இலங்கை உறவுக்கு அரபுலீக் தூதுக்குழு எச்சரிக்கை!

இஸ்ரேலுடன் இலங்கை மீண்டும் உறவுகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பது அரபு நாடுகளுடனான இலங்கையின் உறவைப் பாதிக்கும் என்று இலங்கையில் விஜயத்தை மேற்கொண்டுள்ள அரபு லீக்கின் தூதுக்குழு இலங்கை அரசாங்கத்தை எச்சரித்துள்ளது. இருபத்தியொரு நாடுகள் அடங்கிய அரபு லீக்கின் நான்கு அங்கத்தவர்கள் கொண்ட தூதுக்குழு ஒன்று இப்பொழுது இலங்கையில் விஜயத்தை மேற்கொண்டுள்ளது இவர்கள் ஜனதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன, தேசிய பந்தோபஸ்து அமைச்சர், வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், முஸ்லீம் விவகாரபோக்குவரத்துத் துறை அமைச்சர் ஆகியோரைச் சந்தித்துரையாடினர்.

★ மூன்று தீவிரவாதக் குழுக்கள் ஒன்றுக இணைந்துவிட்டன

★ மறைந்திருந்து தாக்கும் திட்டத்தை மாற்றவுள்ளனர்

★ தீர்க்கமான இறுதி போராட்டத்துக்கு ஏற்பாடு நடக்கிறது

# நேரடி இராணுவ மோதலுக்கு தீவிரவாதிகள் தயாராகின்றனர்!

## பாரதத்தில் பயிற்சி முகாம் உண்டெனவும் பாராளுமன்றத்தில் ஜனதிபதி நேற்று பேச்சு

(பாராளுமன்ற நிருபர்)

உலகிலுள்ள பிரதான பயங்கரவாத இயக்கங்களுடன் தமிழ் பயங்கரவாதிகள் நெருக்கமான தொடர்பு கொண்டிருக்கிருர்கள், தமிழ் தீவிரவாதிகள் மறைந்திருந்து ராணுவத்தைத் தாக்கும் உபாயத்தை விரைவில் மாற்றத்திட்டமிட்டுள்ளனர், மூன்று இயக்கங்கள் பொதுவான ராணுவத் திட்டத்தின்கீழ் ஒன்றுக இணைந்துள்ளதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. இலங்கை ராணுவத்துடன் நேரடியாக மோதுவதற்கு இவர்கள் தயாராகி வருகின்றனர் என்று நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்த ஜனதிபதி ஜெயவர்த்தன, இதனை எதிர்த்துப் போராட சகல வளங்களையும் அரசாங்கம் பயன்படுத்தும் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை ஜனதிபதி நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில், தீர்க்கமானதும், இறுதியானதுமான முடிவைக் காண்பதற்கான போராட்டம் ஒன்றிற்கே தமிழ் தீவிரவாதிகள் இப்போது ஆயத்தம் செய்து கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

தனிமனிதனின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் அதே வேளையில் பயங்கரவாதத்திற்கு எதிராகப் பாதுகாப்பளிப்பது கடினமாகும். ஜனநாயகத்தால் கட்டியெழுப்பப்பட்டுள்ள எமது நம்பிக்கைகளை விட்டுக் கொடுக்கக் கூடிய காலம் கூட விரைவில் ஏற்படலாம் எனவும் ஜனதிபதி சுட்டிக்காட்டினர்.

—4ம் பக்கம் பார்க்க

## கல்லுண்டாய் கட்டடம் தகர்ப்பு

கல்லுண்டாய் வெளியிலுள்ள கட்டடம் ஒன்று நேற்று முன்தினம் இரவு இனம் தெரி

—4-ம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் தமிழ் இளைஞர் முஸ்லிம் வர்த்தகர் கொலை

(வவுனியா)

வவுனியாவில் நேற்று நடைபெற்ற இரண்டு சம்பவங்களில் தமிழ் இளைஞர் ஒருவரும், முஸ்லிம் வர்த்தகர் ஒருவரும் கொலை செய்யப்பட்டனர்.

மனோகரபாலன் என்ற இளைஞர் நேற்றுக் காலை வவுனியா பஸ் நிலையத்தில் வைத்து இனம் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். காட்டிக் கொடுப்பவர் என்று இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

டி. எம். அபூபக்கர் என்ற வர்த்தகர் காயங்களுடன் வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்

—4ம் பக்கம் பார்க்க

★ ஒரு சாதனை !

## செவ்வாயன்று 1049 அகதிகள்;

நேற்றுமுன்தினம் 243 குடும்பங்களைச் சேர்ந்த 1049 தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் வந்து சேர்ந்தனர். ஒரே நேரத்தில் மிக அதிக தொகையில் அகதிகள் வந்தது இதுவேயாகுமெனக் கூறப்பட்டுள்ளது.

## வட, கிழக்கு மக்கள் வீடுகளை விட்டு வெளியேற மார்ச் 15 காலக்கெடு!

(சென்னை)

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலிருந்து அடுத்த மாதம் பதினைந்தாம் திகதிக்குள் சகலரும் தத்தம் இடங்களைக் காலிசெய்து வெளியேறி விடவேண்டும், அல்லது அவர்கள் கொல்லப்படுவார்கள் என்று பாதுகாப்புப்படையினர் மிரட்டியதால் தாம் இலங்கையைவிட்டு பாரதத்திற்கு புகலிடம் நாடி வந்ததாக ராமேஸ்வரம் வந்த இலங்கை தமிழ் அகதிகள் அதிகாரிகளிடம் கூறியதாக இந்திய வானெலியின் சென்னை மாநிலப் பிரிவு நேற்றுத் தெரிவித்தது.

தீவிரவாதிகளைத் தேடுகி

—4ம் பக்கம் பார்க்க

## புதுடில்லி தூதுவர் மறுக்கிருர்

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள் அடுத்த மாதம்பதினைந்தாம்திகதி தமது இடங்களை விட்டு வெளியேறி

— 4ம் பக்கம் பார்க்க

யாழ். கல்விப் பணிப்பாளரின் அறிவித்தல்:

## ஜீ. சி. ஈ. விசேஷ பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அதி முக்கிய கவனத்துக்கு

எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பமாகவிருக்கும் ஜீ சி. ஈ. சாதாரண தர விசேஷ பரீட்சை யாழ்ப்பாண மாவட்டத்தில் நான்கு ஒழுங்கு முறைகளுக்கமைய நடைபெறுமென்றும், இதனைச் சகல பரீட்சார்த்திகளும், பாடசாலை அதிபர்களும் தங்கள் கவனத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமெனவும் யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குறிப்பிட்ட நான்கு ஒழுங்கு முறைகளும் பின்வருமாறு அமையும்:

தமிழ்மொழி I, II, கணிதம் I, II விஞ்ஞானம் I, II தட்டெழுத்து, தொழில் நுட்பப் பாடம் II ஆகிய பாடங்களுக்கு

— 4-ம் பக்கம் பார்க்க

## தவலிங்கம் மாற்றம் ரத்து

கண்டிக்கு இடமாற்றம் செய்யப்பட்ட யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன்

—4-ம் பக்கம் பார்க்க

## சென்பற்றிக்ஸ் கல்லூரியில் 2 லட்சம் பணம் கொள்ளை

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்குச் சொந்தமான சுமார் இரண்டு லட்சம் ரூபா ரொக்கப்பணம் இனம் தெரியாத துப்பாக்கி இளைஞர்களால் நேற்று முன்தினமிரவு கொள்ளையடிக்கப்பட்டதாக

–4 ஆம் பக்கம் பார்க்க

## பஸ் டிப்போ டீசல் கொள்ளை தொடருமானல் அடுத்த வார ஜீ. சி. ஈ. பரீட்சை தடைப்படலாம்

வட பிரதேச போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களில் அடிக்கடி டீசல் கொள்ளையும், பஸ்களின் பட்டரிகளைக் கடத்திச் செல்வதும் இடம்பெறுமானல் இம்மாதம் 27ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜீ சி. ஈ. சாதாரண தரத்துக்கான விசேஷ பரீட்சை தடைப்படலாமென அஞ்சப்படுகின்றது.

பரீட்சை நடைபெறும் 27-ம் திகதி முதல் அடுத்த மாதம் 8-ம் திகதி வரைக்கும் பரீட்சை வினத்தாள்களை பரீட்சை நிலையங்களுக்கு எடுத்துச் சென்று விநியோகிக்கவும், விடைத்தாள்களை நிலையங்களிலிருந்து சேகரிக்கவும் வடபிரதேச போக்குவரத்துச் சபையிடமிருந்து பன்னிரண்டு பஸ்களை யாழ். மாவட்ட கல்வி அலுவலகம் கேட்டுள்ளது.

பரீட்சை நடைபெறும் பத்துத் தினங்களுக்கும் ஆகக் குறைந்தது இருநூற்றைம்பது கலன் டீசலாவது இந்த பஸ்களுக்குத் தேவைப்படுமென்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் டீசல் கொள்ளை தொடர்ந்து நடைபெறுமானல், பரீட்சைக்குத் தேவையான பஸ்களை ஓடவிடுவது சாத்தியமின்றி இருக்குமென்று

–4ம் பக்கம் பார்க்க

# மக்கள் வெறுப்படையாது நடக்கப் பழக வேண்டும்

பொதுமக்களிமிருந்தும், தனியார் நிறுவனங்களிடமிருந்தும் அவசிய தேவைக்காக வாகனங்களைப் பெற்றுக் கொள்ளும் சிலர், சில வேளைகளில் பொதுவான இடங்களில் மிகவும் அநாகரிகமாக நடந்து கொள்வதாக சம்பந்தப்பட்டவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் பஸ் நிலையத்திற்கு தமது சகோதரியுடன் சென்ற ஒருவரின் வாகனத்தை எடுத்துச் செல்ல சிலர் கேட்டபோது, வாகன உரிமையாளர் தெரிவித்த விளக்கத்தைக் கூட அவர்கள் கேட்கப் பொறுமையாக இருக்கவில்லையாம்.

''என்னுடன் வாருங்கள்! சகோதரியை இறக்கி விட்டு வாகனத்தைத் தருகிறேன்'' என்று தான் கூறியதைக்கூட சம்பந்தப்பட்டவர்கள் கேட்காமல், வாகனத்துள் இருந்த பொருட்களை வெளியே தூக்கி வீசிவிட்டு வாகனத்தை எடுத்துச் செல்வதிலேயே அவர்கள் கரிசனையாக இருந்ததாக அவர் சொல்லித் துக்கப்பட்டார்.

மக்களுக்காகச் சேவை செய்பவர்கள், மக்களை அனுசரித்து நடக்கப்பழக வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

## ஒரு வேண்டுகோள்

# மனநோயாளரில் சந்தேகம் கொண்டு தாக்கக் கூடாது!

தமது மருத்துவமனையில் சிகிச்சை பெறும் மனநோயாளர்கள் சந்தேகத்தின் பேரில் தாக்கப்படுவதும் கொலைசெய்யப்படுவதும் பற்றி தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலை மனநோயாளர் நிலைய நண்பர் சங்கம் பொதுமக்களுக்கு ஓர் வேண்டுகோளை விடுத்துள்ளது.

''பொதுமக்களுக்கு ஓர் உருக்கமான வேண்டுகோள்'' என்ற தலைப்பில் விடப்பட்டுள்ள இவ் வேண்டுகோளில் பராமரிக்க யாருமற்ற மனநோயாளரின் செயல்களும் நடமாட்டமும் அவர்களை அறியாதவர்களுக்கு சந்தேகத்தைத் தருவது இயல்பேயென்றும் அதற்காக அவர்கள் தண்டிக்கப்படுவது அபத்தமானதென்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இகனல் இத்தகைய முயற்சியில் ஈடுபடுவோர் யாராயினும், அவர்கள் தீர விசாரணை செய்து ஆராய்ந்து அதன் மூலம் மனநோயாளர் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்யும் வண்ணம் பணிவோடு வேண்டப்பட்டுள்ளது.

# அகதிகளுக்கு நிதி சேகரிப்பு

(மிருசுவில்)

முல்லைத்தீவிலுள்ள அகதிகளுக்கு உதவுவதற்கென கிளாலி வாழ் கத்தோலிக்க மக்களால் அண்மையில் நிதி சேகரிக்கப்பட்டது- இந் நிதியினை மிருசுவில் பங்குத்தந்தை அருள்திரு. அமிர்தகுமார் அடிகளார், யாழ் மனித முன்னேற்ற நடுநிலைமன்றச் செயலாளர் அருள்திரு. பயஸ்அடிகளாரிடம் கையளித்தார்.




⁂ கோப்பாய் வடக்கு பாலேந்திரன் ஈஸ்வரி தம்பதிகளின் மகள் பானுஷா இன்றுதனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

⁂ இளவாலை ஜெகநாதன் புவனேஸ்வரி தம்பதிகளின் மகன் ஜெகநேசன் இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

⁂ காரைநகர் நடராசா இலட்சுமி தம்பதிகளின் மகள் சிவகௌரி இன்று தனது பதினோராவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

⁂ கந்தர்மடம் கனகலிங்கம் புஷ்பராணி தம்பதிகளின் மகள் சுதாசினி இன்று தனது பன்னிரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

⁂ அச்சுவேலி கதிரிப்பாய்சந்திரவிந்திரன் பிறேமாவதி தம்பதிகளின் மகள் கஜனி இன்று தன் முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

⁂ உடுவில்வடக்கு தில்லைநடேசன் ஜெயதேவி தம்பதிகளின் மகள் தர்மபிரியா இன்றுதனது ஒன்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

## யாழ் மாநகர சபைப் பகுதியில்

# ஐந்துவருட யுனிசெப் திட்டம் ஒருகோடி 65 லட்சம் செலவு

யுனிசெப் நிறுவனத்தினால் யாழ் நகரப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களுக்காக 1984 ஆம் ஆண்டு முதல்1989 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு ஒருகோடியே அறுபத்தைந்து இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு சீ,வீ கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ் நகரில் குடிநீர் விநியோகம், சுகாதாரம் போன்றவற்றிற்கு யுனிசெப்பின் உதவி கிடைத்து வருவதாகக் குறிப்பிட்ட ஆணையாளர், இவற்றைச் சிறப்பான முறையில் செயற்படுத்துவதற்கு பொது மக்களின் பங்களிப்பு மிகவும் அவசியம் என்று வலியுறுத்திக் கூறினார்.

யுனிசெப நிறுவனத்தினால் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களையும் அங்குள்ள உள்ளூராட்சி மன்றச் செயற்பாடுகளையும் பார்வையிடுவதற்காகவே தாம் இந்தியாவிற்கு சமீபத்தில் விஜயம் செய்ததாகத் தெரிவித்த அவர், யுனிசெப் நிறுவனமே இப் பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்ததாகவும் கூறினர்.

இச்சுற்றுப் பயணத்தின் போது யாழ் மாநகரசபை ஆணையாளருடன் இலங்கையின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த மற்றும் ஆறுபேர் சென்றிருந்தார்கள். இவர்கள் பம்பாய், அகமதாபாத், ஹைதராபாத், கல்கத்தா, டில்லி ஆகிய நகரங்களில் இரண்டு வாரங்களுக்குச் சுற்றுப் பயணம் செய்து பல்வேறு திட்டங்களையும் பார்வையிட்டனர்.

# வீதிகள் திருத்தம்

(புத்தூர்)

புத்தூர்பகுதி இளைஞர்களும் யுவதிகளும் ஒன்றிணைந்து சுலைகம் சாவகச்சேரி வீதியை சிரமதான முறையில் புனரமைத்து வருகின்றனர். கல், மண் முதலானவற்றைக் கொண்டுவரவும் ஏனைய தேவைகளுக்கும் வாகனங்கள் இவர்களுக்குக் கொடுத்துதவப்படுகின்றன. பொதுமக்கள் இவர்களுக்கு உணவளித்தும் ஒத்தாசை புரிந்தும் உற்சாகப்படுத்தி வருகின்றனர்.

# சாவகச்சேரி நீர் வழங்கல் வேலை தடங்கல்

(சுண்டிக்குளி)

கடந்த வியாழக்கிழமை இரவு சாவகச்சேரியில் குழாய் நீர் விநியோகத் திட்ட வேலைகளை மேற்கொண்டு வரும் சமக்கோன் நிறுவனத்தின் சாவகச்சேரி அலுவலகக் களஞ்சியத்திலிருந்து பல லட்ச ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

சாவகச்சேரித் தொகுதிக்கான நீர் விநியோகத் திட்டத்தைத் தொடர்வதற்காக யாழ். நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடம் இவ் உபகரணங்கள் கையளிக்கப்பட இருந்தனவாம் இக்கொள்ளையை அடுத்து சாவகச்சேரித் தொகுதிக் குழாய் நீர் விநியோகத் திட்ட வேலைகளைத் தொடர முடியாத நிலையேற்பட்டுள்ளது.

# கட்டிடக் கொந்தராத்து

கிளிநொச்சி கருணைநிலையத்தில் 54x110 அடி மண்டபம் அமைக்க பின்வரும் வேலைகளுக்கு கேள்வு கோரப்படுகின்றது:

(1) மண்டபம் அமைக்க கூலிக் கொந்தராத்து.

(2) ஏழு 38 அடி அகல திரஸ் (Truss)

(3) 100 கியுப் டலதர கற்கள்

(4) 150 கியுப் ஆற்று மண்

கேள்வு முடிவு தேதி 5-3-85 முதலாம் இரண்டாம் கேள்வுகளுக்குரிய பட விபரங்களை ஒவ்வொன்றுக்கும் ரூபா 25/- கட்டி கிளிநொச்சியில் கருணைநிலையத்திலும் யாழ்ப்பாணத்தில் Y. M. C A இலும் பெற்றுக் கொள்ளலாம்.

காரியதரிசி

கருணைநிலைய முகாமை மன்றம்

C/0 Y. M. C. A. யாழ் பாணம்

# 31ம் நாள் நினைவஞ்சலி

## மு. கணேசலிங்கம்



மலர்வு: 29.8.1964

உதிர்வு: 22.1.1985

அன்புடனும் பண்புடனும் அனைவருடனும் பழகி உற்றார் உறவினர்க்கு உதவிகள் செய்து, 21ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்த எங்கள் இல்லத்தின் ஒளிவிளக்கை வீணர் விட்ட சன்னம் நெஞ்சினில் பாய்ந்து மீளாத் துயில் கொள்ளச் செய்து விட்டது. எம் அன்பே, உமது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்

ஆ. முத்தையா (குடும்பத்தினர்)

மாமன் மாமியார் (குடும்பத்தினர்)

(கொடிகாமம்)

சங்கத்தார் வயல்,

இயக்கச்சி.

# யாழ்ப்பாணம் பஞ்சத்தை நோக்கிச் செல்கின்றது!

பாதைகள் சேதமாக்கப்பட்டதால் யாழ்ப்பாணத்திலிருந்து துண்டிக்கப்பட்டு நிதானமாக, ஆனால் நிச்சயமாக பஞ்சத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம். இவற்றோடு மேலதிக சுமையாக மருத்துவ குறைபாடும் கவனிப்பின்மையும அமைகின்றன. எனவே இவ் விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுத்து மக்களை இந்தச் சிக்கலில் இருந்து விடுவிக்கவேண்டும் என சுகாதார அமைச்சர் ரஞ்சித் அத்தபத்துவை, பருத்தித்துறை பிரஜைகள் குழு கேட்டுள்ளது.

சுகாதார அமைச்சருக்கு பிரஜைகள் குழு எழுதியுள்ள கடிதமொன்றில் மக்களது சுகாதார, மருத்துவ தேவைகள் சம்பந்தமான மூன்று குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியுளளது.

கரையோரத்திலுள்ள தமது வீடுகளைக் காலி செய்யுமாறு கேட்கப்பட்டவர்கள் தற்போது ஆலயம், பாடசாலை போன்றவற்றில் குடியிருக்கிறார்கள். இவர்களுக்கு போதிய கழிவிட வசதிகள் இல்லாததினால் வயிற்றோட்டம் போன்ற கடுமையான நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதே போன்று பருத்தித்துறை ஆஸ்பத்திரியின் ஒரே பெரு டாக்டரும் முன்னறிவிப்பின்றி யாழ் ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். மக்களது சுகாதார வசதி பற்றிய அக்கறை கிஞ்சித்தும் இல்லாமல் இது செய்யப்பட்டுள்ளது. மூன்றாவதாக பருத்தித்துறையில் மட்டுமன்றி யாழ்குடா பூராவிலும் உள்ள குறைபாடான மருந்துப்பொருட்கள் பற்றாக்குறை.

இந்த மூன்று குறைபாடுகளையும் குறிப்பிட்டு இந்த சுகாதாரத் தேவைகளை நிறைவேற்ற ஆவன செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## விற்பனைக்கு

சிங்கர் குளிர்சாதனப்பெட்டி கசெட் ரேடியோ, விற்பனைக்கு உண்டு. 211, கச்சேரி நல்லூர் வீதி

# வரி விளம்பரம்

## தேவை

கிளிநொச்சியிலுள்ள கருணை நிலையத்தில் பாலர் பாடசாலையில் கற்பிப்பதற்கு தராதரப் பத்திரமுள்ளகிறீஸ்தவ பெண் ஆசிரியர் தேவை. வதிவிடவசதி உண்டு. 6, 7, 8ம் வகுப்பில் கணிதம் கற்பிக்கும் தகைமையிருப்பின் முன்னுரிமை தரப்படும். 27-2 85 இல் காலை 9 மணிக்கு சான்றிதழ்களுடன் நேரில் சந்திக்கவும் வண. சாம் டி ஹோர்சிங்டன் சென் யேம்ஸ் ஆலயம், நல்லூர், யாழ்ப்பாணம்.

மேசைகள், கதிரைகள், கட்டில்கள், தொட்டில்கள் வாங்கவும், விற்கவும் தினமும் வாருங்கள். ஏல விற்பனை நிலையம், கோப்பாய்.

# நிருபர்கள் தேவை

⁂ காங்கேசன்துறை, சாவகச்சேரி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் மார்ச் முதலாம் திகதி முதல் நிருபர்களாகப் பணியாற்ற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஊர்காவற்றுறை, மாதகல், அளவெட்டி வல்வெட்டித்துறை, பளை, பரந்தன், பூநகரி ஆகிய இடங்களுக்கும் உடனடியாக நிருபர்கள் தேவை.

அந்தந்தப் பகுதிகளில் நிரந்தரமாகக் குடியிருப்பவர்களே விண்ணப்பிக்கலாம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நல்லறிவும், செய்தி சேகரிப்பதில் ஆர்வமும் உடையவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும். என்வலப்பின் இடபக்க மேல் மூலையில் ' நிருபர் பதவி ' என்று குறிப்பிடவும்.

சகல விண்ணப்பங்களும் அந்தரங்கமாக வைத்திருக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி 25-2-1985

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-

ஆசிரியர்,

ஈழமுரசு,

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழமுரசு

21—2—1985



### உதய சிந்தனை

ஞானமில்லாதவனும், சிரத்தையில்லாதவனும் நம்பிக்கையற்ற மனமுடையவனும் நாசமடைகின்றான் நம்பிக்கையற்ற மனமுடையவனுக்கு இவ்வுலகு இல்லை, வேறு உலகும் இல்லை. சுகமும் இல்லை.

- பகவத் கீதை

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி : 23336

## இதய ஒலி

21-2-85 வியாழக்கிழமை (இரத்தாக்ஷி மாசி 10)

# அமிரின் பேச்சும் அனுராவின் அவசரமும்

இலங்கையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் சென்னையில் தெரிவித்ததாக கூறப்படும் ஒரு கருத்துப் பற்றி, இந்நாள் எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்த கருத்துக்கள் அரசாங்க அமைச்சரவையின் உயர்மட்டப் பரிசிலனை வரை சென்றுள்ளது.

இதுபற்றி இப்போது பூரணமான விசாரணை நடைபெறுகின்றது என்றும், அமிர்தலிங்கம் உண்மையில் என்ன பேசினார் என்பதைக் கண்டறிய வேண்டியதே முதலாவது நடவடிக்கை என்றும் அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் அமைதியாகப் பதிலளித்துள்ளார்.

அமிர்தலிங்கம் இந்த நாட்டின் சாதாரண ஒரு பிரஜையல்ல, தமிழ் மக்களின் மிகப்பெரிய அரசியல் கட்சியின் தலைவர்களில் ஒருவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர். முன்னாள் எதிர்க்கட்சி தலைவர்.

எனவே அவரது பேச்சினை விமர்சித்து, அவர் குற்றவாளி என்ற நாமம் சூட்டுவதற்கு முன்னர் அவர் உண்மையில் என்ன பேசினார் என்பதைக் கண்டறிய வேண்டியது பொறுப்பு வாய்ந்த அரசியலாளர்களின் கடமையாகும்.

இதனைத் தவிர்த்து, இந்த நாட்டில் காலடி வைத்ததும் அமிர்தலிங்கத்தைக் கைது செய்ய வேண்டும் என்று சிங்கள மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி விளையாடுவதற்காக பேசுவதால் எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை.

திரு. அமிர்தலிங்கம் எப்பொழுதாவது தமது பேச்சில் இலங்கை மீது இந்தியா படையெடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டாரா?

இலங்கை மீது பாரதம் ராணுவத் தாக்குதலை மேற்கொண்டு இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று அவர் கேட்டாரா?

பங்களாதேஷின் மீது பாரதம் படையெடுத்தது போல, இலங்கையின் மீதும் நடந்து கொள்ள வேண்டுமென்று அமிர்தலிங்கம் வேண்டுகோள் விடுத்தாரா?

இதுதான் இப்போது அரசியல் கட்சிகளின் முன்வைக்கப்பட்டுள்ள கேள்விகளாகும்.

சில வேளைகளில் திரு. அமிர்தலிங்கம் இதற்குத் தெரிவித்த பதில்கள் இந்நேரத்தில் வெளியாகியுமிருக்கலாம். ஆனால், கடந்த ஐந்து நாட்களாக இது தொடர்பாக நாம் வெளியிட்ட செய்திகளின்படி, எமக்குக் கிடைத்த தகவல்கள் அப்படியாக அமிர்தலிங்கம் பேசியதாகத் தெரிவிக்கவில்லை.

இலங்கையின் தற்போதைய நிலையை, பங்களாதேஷின் போருக்கு முன்னைய நிலையுடன் அவர் ஒப்பிட்டுப் பேசியது உண்மை.

தினம் தினம் நூற்றுக்கணக்கான இலங்கை அகதிகள் தமிழ் நாட்டுக்குள் வந்து கொண்டிருக்கும் நிலையை பங்களாதேஷின் அன்றைய நிலையுடன் ஒப்பீடு செய்தமையை யாரும் தவறென்று கூறமுடியாது. ஒரு அரசியல் தலைவருக்கு அந்த உரிமையுண்டு.

இலங்கையின் இனக்கொலைகளைத் தடுக்க இந்தியா நேரடி நடவடிக்கையில் இறங்க வேண்டும். அல்லது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் மூலம் நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்றும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தது உண்மையே.

இவ்வாறான ஒரு வேண்டுதலை விடுக்க பாதிக்கப்பட்ட மக்களின் தலைவருக்கு உரிமையுண்டு. ஆனால், இலங்கை மீது படையெடுக்குமாறு அவர் கேட்டாரா?

''இலங்கை மீது எடுக்கப்படும் நேரடி நடவடிக்கை எவ்வாறானதாக அமைய வேண்டும் என்பதை பாரத அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும்'' என்றே திரு. அமிர்தலிங்கம் மிகவும் அவதானமாகவும், வார்த்தைகளை அளந்தும் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும்,

நேரடி நடவடிக்கை எவ்வாறானதாக அமைய வேண்டும் என்பதை திரு. அமிர்தலிங்கம் ஒருபோதும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அது எவ்வாறானதாக அமைய வேண்டுமென்பதை பாரத அரசே தீர்மானிக்க வேண்டுமென்றுதான் அவர் தெரிவித்துள்ளார்

இந்த நிலையில், உண்மையைச் சரியாக ஆராயாமல் எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா கொஞ்சம் அவசரப்பட்டு விட்டார் என்றே எமக்கு எண்ணத் தோன்றுகின்றது.

தேசத்துரோகி என்றே அமைச்சர் ஒருவரினால் பட்டம் சூட்டப்பட்ட திரு அமிர்தலிங்கத்துக்கு அனுரா பண்டாரநாயக்காவின் கைது செய்ய வேண்டும் என்ற கோரிக்கையினால் எந்தத் தாக்கமும் ஏற்படப்போவதில்லை.

ஆனால், பொறுப்பு வாய்ந்த பதவியை வகிக்கும் ஒருவர், சாதாரண மூன்றாம் தர அரசியல்வாதி போன்று, உண்மையை விசாரித்து அறியாது, பொறுப்பின்றிப் பேசியிருக்கக் கூடாது என்பதே எமது கருத்தாகும்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்பது, சிங்கள எதிர்க்கட்சிகளின் தலைவர் என்று அர்த்தப்படக்கூடாது

திரு அமிர்தலிங்கம் போன்ற பல பொறுப்பானவர்கள் அமர்ந்திருந்த ஆசனத்தில் இப்போது அமர்ந்துள்ள திரு. அனுரா பண்டாரநாயக்கா, நிதானமாக நடப்பதன் மூலம் அந்த ஆசனத்தின் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்பதே எமது விருப்பமாகும்.

### பாரத நிலைப்பாடு மீண்டும் வலியுறுத்து

# அயல் நாடுகளுடன் சுமுக உறவே இலட்சியம் - ராஜீவ்

(புதுடில்லி)

''பாரதம் அண்டை நாடுகளுடன் தொடர்ந்தும் சுமுகநிலை கொண்டிருக்கவே விரும்புகிறது. அமைதி, சகவாழ்வு என்பனவே பாரதத்தின் இலட்சியங்களாகும், தூய்மையான அரசு ஒன்றினை மக்களுக்கு அர்ப்பணிப்பதில் நாம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்'' என்று பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி நேற்று மீண்டும் வலியுறுத்திக் கூறினார் மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் உட்பட பல பகுதிகளிலும் உரையாற்றுகையில் பிரதமர் தனது அரசின் நிலைப்பாட்டை ஆணித்தரமாக வெளிப்படுத்தினார்.

''சிறுபான்மையினர், இளைஞர்கள், பெண்கள், விவசாயிகள் ஆகியோருக்கு சீரான வாழ்வமைத்துக் கொடுப்பதில் அரசு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ளும்'' என்று சொன்ன பிரதமர், ''திருமதி இந்திரா காந்தி கொலை செய்யப்பட்டவேளை தலைநகரில் நிகழ்ந்த அசம்பாவிதங்கள் குறித்து நீதி விசாரணைக் கமிஷன் நியமிக்க வேண்டுமென்று எழுந்த கோரிக்கை குறித்துப் பிரஸ்தாபிக்கையில், சீக்கிய சமூகத்தின் நலன் கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. அவர்களுக்கெதிரான சூழ்நிலையை மீண்டும் உருவாக விரும்பவில்லை'' என்றார்.

பஞ்சாப மாநிலத்தில் சமாதானம், அமைதி நிலவ சீக்கிய சமூகத்தவர் யாவரும் உதவ வேண்டும் என்ற கோரிக்கையையும் விடுத்தார்.

## மாணவர் காயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியினருக்கு எதிராக நடத்தப்பட்ட மாணவர் கிளர்ச்சியின்போது மூன்று மாணவர்கள் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

### தற்காலிகமாக சண்முகம் நியமனம்

# புதிய சபாநாயகர் தெரிவு 27ல் நிகழும் என அறிவிப்பு

(சென்னை)

தமிழ் நாடு சட்டசபையின் தற்காலிக சபாநாயகராக அ. தி. மு. க. பொதுச்செயலாளரும், சபையின் நீண்டகால உறுப்பினருமான திரு. ப. உ. சண்முகம் தெரிவு செய்யப்பட்டுள்ளார், தமிழ் நாடு சட்டசபையின் புதிய சபாநாயகர் துணைச்சபாநாயகர் தெரிவு இம்மாதம் 27ம் திகதி நடைபெறும்.

சட்டசபை முன்னவராக நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியனும் மேலவை முன்னவராக செய்தி அறநிலையத்துறை அமைச்சர்திரு ஆர் எம் வீரப்பனும் தெரிவாகியுள்ளனர்.

புதிய சட்ட சபை உறுப்பினர்கள் இம்மாதம் 25ஆம் திகதி பதவியேற்றுக் கொள்வர். சட்டசபை, மேலவை கூட்டுக் கூட்டத்தொடர் அடுத்த மாதம் 8ம் திகதி ஆரம்பமாகவுள்ளது

### பாகிஸ்தான் ஜனாதிபதி அறிவிப்பு

# முன் வரையப்பட்ட அரசியல் சாசனத்தில் திருத்தம் வரும்

(லாகூர்)

பொதுத் தேர்தல் நடவடிக்கையில் ஒன்றாக, 1973ம் ஆண்டில் அரசியல் சாசனத்தில் திருத்தம் செய்யப்படவுள்ளது என்று பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல்-ஹக் நேற்று லாகூரில் தெரிவித்துள்ளார்

தேர்தலுக்கு முன் ஒருநாள் இத்திருத்தம் இடம்பெறும் எனச் சொன்ன அவர் திகதி குறித்துக் குறிப்பிடவில்லை

1973ம் ஆண்டின் அரசியல் சாசனம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதே தவிர அது ரத்துச் செய்யப்பட்டு விடவில்லை என்றார் அவர்.

இந்த அரசியல் சாசனத்துக்குப் வேறுபட்ட வகையிலான ஏழாண்டுகாலப் பணிகளை தான் வீணாக்க விரும்பவில்லை என்றும் ஜெனரல் ஷியாவுல் ஹக் தெரிவித்தார்.

## நால்வர் கொலை

(லண்டன்)

வியட்னாமியப் படைத் தாக்குதல் ஒன்றில் தாய்லாந்தைச் சேர்ந்த நால்வர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் கம்பூச்சிய எல்லையில் இச்சம்பவம் நடைபெற்றதாகவும் அறிவிக்கப்படுகிறது.

# இராணுவ ஜெனரல் தயாள் இருநாள் தென்னக விஜயம்

### எம். ஜி. ஆரையும் சந்திக்க ஏற்பாடு

(சென்னை)

பாரத இராணுவ உயர் மட்ட அதிகாரியான லெப்டினன்ட் ஜெனரல் ரஞ்சித் தயாள் இருநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு தென்னகம் வந்துள்ளார்.

தமிழகம் உட்பட ஆந்திர, கர்நாடக மாநிலங்களுக்கும் சென்று அவர் இராணுவ அதிகாரிகளுடன் சமபாஷிப்பார் என நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

அவர் சென்னையில் முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனையும், ஆளுநர் திரு. எஸ். எல், குரானாவையும் சந்திப்பார் எனவும தகவல் வெளியாகியுள்ளது.

### ''பாரதத்தை மதிக்காது இலங்கை

# ராணுவம் செயற்படுகிறது'' குடியரசுக் கட்சி கண்டனம்

(வேலூர்)

இலங்கையில் இராணுவம் தமிழர்களைத் தொடர்ந்து படுகொலை செய்துவருவதற்குக் கண்டனம் தெரிவித்து பாரதக் குடியரசுக் கட்சியின் தமிழ் நாடு கிளை தீர்மானம்ஒன்றினை நிறைவேற்றியுள்ளது.

இக்கட்சியின் மாநிலச் செயற்குழுக் கூட்டம் வேலூரில் நடைபெற்றது,

பாரதத்தின் நல்லெண்ண முயற்சியையும், எதிர்ப்பு நடவடிக்கையையும் பொருட்படுத்தாது இலங்கை இராணுவம் செயற்படுகிறது என்றும் இத்தீர்மானம் தெரிவிக்கிறது.

## கர்நாடக மாநிலத்தில் ஒரு ஸ்தானத்திற்கு மட்டும் களத்தில் நிற்போர் 300

(பெங்களூர்)

கர்னாடக மாநிலத்தில் உள்ள பெல்காம் என்ற தொகுதியில் நடைபெறவிருக்கும் சட்டசபைத் தேர்தலில் ஆகக் கூடுதலாக 301 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்,

கூடுதலான வாக்காளர் போட்டியிடுவதில் இத்தொகுதியே சாதனை நிலைநாட்டியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

### திருவனந்தபுரத்தில்

# கடல், எல்லை படையினருடன் நரசிம்மராவ் ஆலோசனை

(திருவனந்தபுரம்)

பாரத பாதுகாப்பு மந்திரி திரு பி.வி நரசிம்மராவ் திருவனந்தபுரத்தில் கடற்படை கடலோரப்பாதுகாப்புப் படை அதிகாரிகளுடன் விரிவான ஆலோசனை நடத்தியுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

அதிகாரிகள் மந்திரியிடம் பாதுகாப்பு நிலைவரம் குறித்து விளக்கினர் என்றும் இரு கப்பல்கள் ரோந்துப் பணியில்ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று மந்திரியிடம் தெரிவிக்கப்பட்டது என்றும் மேலும் கூறப்பட்டது.

ஈழமுரசு

## கடலில் துப்பாக்கிச் சமர்; ஐவர் மரணமடைந்தனர்!

இம் மாதம் 8-ம் திகதி தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் மோட்டார் இயந்திர விசைப்படகு இலங்கை கடற்படையினரின் முற்றுகைக்குள்ளான போது, இரு பகுதியினருக்குமிடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் விடுதலைக் கழகத்தைச் சேர்ந்த ஐவர் மரணமடைந்ததாக துண்டுப் பிரசுரமொன்றின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. வல்வெட்டித்துறை ஞானவேல் (பாண்டி அல்லது கறுப்பன்), மீசாலை சுதாகரன் (சின்னமலை அல்லது ரகுபதி), வவுனியா ரஞ்சித் றுபேர்ட் (டக்ளஸ்), யாழ்ப்பாணம் ரவீந்திரன் (அம்பி), கரவெட்டி மோகன (ரூபன்) ஆகியோரே மரணமடைந்தவர்கள் என்று, 'மரணம் வாழ்வின் முடிவல்ல' என்ற தலைப்பில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தால் வெளியிடப்பட்ட பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பொதுமக்கள் வேண்டுதலை ஏற்று

# இன்று முதல் மீண்டும் நீதிமன்றங்களுக்கு செல்வதென்று சட்டத்தரணிகள் முடிவு

(அரியாலை)

பொதுமக்களின வேண்டுகோளை ஏற்றும், அவர்களின நன்மையைக் கருதியும் யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் இன்று முதல் நீதிமன்றங்களுக்கு வழக்கம் போலச் சென்று பணிபுரிவதென நேற்று நடைபெற்ற சட்டத்தரணிகள் சங்க கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், மல்லாகம், ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, பருத்தித்துறை நீதிமன்றப் பகுதிகளைச் சேர்ந்த சட்டத்தரணிகள் கலந்து கொண்ட இக்கூட்டத்துக்கு சட்டத்தரணி எஸ் ஆர். கனகநாயகம் தலைமை வகித்தார்.

தத்துவ பராயமிழப்பு, வேலையிழந்தவர், பராயமடைந்தவர்கள், அவசர தடையுத்தரவு சம்பந்தமான வழக்குகள், விதவைகள், இளஞ்சிறார்கள், மனநிலைகுன்றியோர் இவர்களுக்கு உடனடியாக சமர்ப்பிக்க வேண்டிய மனுக்கள் சம்பந்தமான வழக்குகள் எடுக்கப்படாமல் கஷ்டங்கள் ஏற்படுவதாலும், சட்டத்தரணிகள் நீதிமன்றங்களுக்குச் செல்லாவிட்டாலும், அரசாங்க விதிகளின் படி நீதவான்களுக்குத் தமது கடமைகளைச் செய்யும்படி பிரதம நீதியரசரும் நீதிபரிபாலன ஆணைக்குழுவும் சகல நீதிமன்றங்களுக்கும் விஷேட பணிப்புரை விதித்தபடியாலும், பல குறைவிளக்கத்தில் உள்ள வழக்குகள் குழம்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளபடியாலும் இம் முடிவு எடுக்கப்பட்டதாகக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

பொதுவாக ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள், நீதிமன்றங்கள் எந்தக் குழப்ப நிலை ஏற்பட்டாலும் இயன்றளவு இயங்குவது நன்மை பயக்கும் எனவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

### அண்மையில் நடந்த கொள்ளைகளின் எதிரொலி:

## யாழ குடாநாட்டின் 75 லட்சம் ரூபா செலவு மின்னிணைப்பு வேலை இடைநிறுத்தப்படும்

கடந்த வருட பிற்பகுதியில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வீதி திருத்த வேலைகளை நடத்தக் கூடாதென்று அவசரகால விதிகளின் கீழ் அரசாங்கம் விதித்த தடை காரணமாக, வீதி வேலைகளுக்கென ஒதுக்கப்பட்ட பெரும் தொகை பணத்தையும் கடைசி நேரத்தில் மின் இணைப்பு அபிவிருத்தி வேலைகளுக்கு மாற்றி ஒதுக்கியும் கூட அவற்றின் நன்மைகளை குடாநாட்டு மக்கள் அனுபவிக்க முடியாத நிலை இப்போது உருவாகியுள்ளது.

மின் இணைப்பு உபகரணங்கள் அடுத்தடுத்துக் கொள்ளையடிக்கப்பட்டதே இதற்குக் காரணமாகும்.

1984ம் ஆண்டில் குடாநாட்டில் பதினைந்து பிரதான உப மின் நிலைய வேலைகளுக்கென ஒதுக்கப்பட்ட ஐம்பது லட்சம் ரூபா வேலைகளையும் பூர்த்தி செய்யமுடியாத துர்ப்பாக்கியம் இதனால் ஏற்பட்டுள்ளதென அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாண்டில் ஆரம்பிப்பதற்கென 23 லட்சம் ரூபா பண ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ஏழு பிரதான உப மின் நிலைய வேலைகளும் கூட இப்பொழுது தொடங்க முடியாத நிலை அண்மைய கொள்ளைகளினால் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தவிர 45 மின் விஸ்தரிப்பு வேலைகளுக்கு மொத்தம் பத்து லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. இத்தடங்கலினால் ஏறக்குறைய 150 லட்சம் ரூபா அரசாங்கத்திடமிருந்து மானியமாகப் பெற முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

கொள்ளையடிக்கப்பட்ட மின் உபகரணங்கள் மீளக் கிடைக்காதுவிடின் மின் இணைப்புக்காகப் பெயரைப் பதிவு செய்திருக்கும் பொதுமக்கள், விவசாயிகள் ஏமாற்றமடையும் நிலையும், புதிய மின் விஸ்தரிப்பு, புதிய உப மின் நிலைய அமைப்பு வேலைகளைத் தொடர முடியாத நிலையும் ஏற்படும் என்றும், இத்துன்பங்களைப் பொதுமக்களும் தன்னுடன் பகிர்ந்து அனுபவிப்பதைத் தவிர வேறெந்த வழியுமில்லை எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

### பிரஜைகள் குழு நாளை கூட்டம்

தமிழ்ப்பகுதி பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்கு யாழ். மாநகர ஆலோசனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சகல குழுக்களின் தலைவர், செயலாளர் அல்லது மற்றிரு உறுப்பினர்கள் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### பலவந்தமாக குழப்பாதீர்!

பலவந்தமாக பரீட்சைகளைக் குழப்புதலையும், மாணவர்களைப் பரீட்சைகளைப் பகிஷ்கரிக்குமாறு வேண்டுதலையும் தமிழீழ மாணவர் பேரவை வன்மையாகக் கண்டித்துள்ளது. சுய சிந்தனையில் மலரும் பகிஷ்கரிப்புகளே விடுதலைக்குத் தேவையாகும் எனச் சுட்டிக்காட்டியுள்ள பேரவை தமது கல்வியைத் தமிழீழ மக்களின் விடுதலைக்குப் பயன்படுத்துமாறு மாணவர்களைக் கேட்டுள்ளது.

### கொள்ளை

(மானிப்பாய்)

நேற்றிரவு யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்திற்குள் திடீரென உட்புகுந்த இளைஞர் கோஷ்டியொன்று அங்கு காவலுக்கு நின்ற இரவுக் காவலாளியை துப்பாக்கி முனையில் பயமுறுத்திவிட்டு கல்விப் பணிப்பாளரின் அறையை உடைத்து அங்கிருந்த றோனியோ மெசினையும் மின் விசிறியையும் அபகரித்துச் சென்றுள்ளது.

### விடுதலை செய்க

(அரியாலை)

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சட்டத்தரணி எஸ். அமிர்தலிங்கத்தை விடுதலை செய்யுமாறும், அவரது குடும்பத்துடன் அவரை இணைந்து வாழ அனுமதிக்குமாறும் கோரும் தீர்மானம் நேற்று நடைபெற்ற யாழ் சட்டத்தரணிகள் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

### புதுடில்லி...

— 1-ம் பக்கத் தொடர்

விடவேண்டும் என பாதுகாப்புப் படையினர் உத்தரவிட்டுள்ளதாக வந்த செய்தியை புதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதுவராலயம் மறுத்துள்ளது.

இவ்வாறு வெளியேற்ற விட்டால் அவர்கள் கொல்லப்படுவார்கள் எனப் படையினர் மிரட்டியதாக வந்த செய்தியும் உண்மையல்லவென்று தூதுவராலயம் தெரிவித்துள்ளது.

### வடகிழக்கு மக்கள்...

1-ஆம் பக்கத் தொடர்

றோம் என்று கூறிப் பாதுகாப்புப்படையினர் வகை தொகையில்லாமல் தமிழர்களைக் கொல்வதாக இவ்வகதிகள் அதிகாரிகளிடம் மேலும் கூறியதாகவும் இச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் ராமேஸ்வரத்துக்கு இலங்கையிலிருந்து வரும் தமிழ அகதிகளின் தொகை வெகுஞ்சமும் குறையவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

### பஸ் டிப்போ...

—1-ஆம் பக்கத் தொடர்

போக்குவரத்துச்சபை அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அது மட்டுமன்றி பரீட்சை நாட்களில் மாணவர்களை ஏற்றி இறக்கவும் கூட போதிய பஸ் சேவைகளை நடத்தவும் கஷ்டம் ஏற்படலாமெனவும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டுச் சொன்னார்.

### தவலிங்கம்..

—1ம் பக்கத் தொடர்

திரு.எஸ்.தவலிங்கம் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்திலேயே கடமையாற்றுவார். வரது இடமாற்ற உத்தரவு நேற்று ரத்துச் செய்யப்பட்டது.

### வவுனியாவில்..

— 1-ம் பக்கத் தொடர்

செல்லப்பட்டார். அவர் மரணமானதாக அங்கு தெரிவிக்கப்பட்டது. இவர் பூந்தோட்டப் பகுதியைச் சேர்ந்தவராவர். இருவரது சடலங்களும் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன,

### சென்பற்றிக்ஸ்...

— 1-ம் பக்கத் தொடர்

அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு 10-30 மணியளவில் கல்லூரி அதிபர், உப அதிபர் ஆகியோர் தங்கியிருக்கும் அறைக்குள் திடீரென நுழைந்த வானொன்றில் வந்த சில இளைஞர்கள் துப்பாக்கி முனையில் பணத்தை அபகரித்தார்களாம்.

''சென் பற்றிக்ஸ் பாடசாலைக்கு அரசாங்க உதவி எதுவும் கிடைப்பதில்லை; ஏழை மாணவர்களிடமிருந்து சேகரித்த வசதிக் கட்டணமும், ஆசிரியர்களுக்கான இம்மாதச் சம்பளமும் மட்டுமே கைவசம் இருப்பதாக எத்தனையோ தடவைகள் அவர்களிடம் எடுத்துச் சொன்ன போதும் அவர்கள் செவிசாய்க்கவில்லை'' என்று கல்லூரி நிர்வாகிகளில் ஒருவர் தெரிவித்தார்.

இக்கொள்ளைச் சம்பவத்தையிட்டு மாணவர், பெற்றோர் மிகுந்த கவலையடைந்தவர்களாக நேற்றுக் காணப்பட்டனர்.

### நேரடி இராணுவ...

— 1-ம் பக்கத் தொடர்

அவர் இங்கு மேலும் பேசியதாவது:

கூட்டுக் கண்காணிப்பு வலயத்துக்கு பாரதம் ஏன் மறுக்க வேண்டும்? அவ்வாறான வலயம் பயங்கரவாதிகள் இலங்கைக்குள் ஊடுருவுவதைத் தடுப்பதோடு இலங்கையிலிருந்து பாரதத்துக்கு அகதிகள் செல்வதையும் தடுக்கும். தமிழ்நாட்டில பயங்கரவாத முகாம்கள் இருப்பதற்கான பல சான்றுகள் எம்மிடமுண்டு.

சாவகச்சேரி மாநாட்டு யோசனைகள் தாம் ஒன்றும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் விடுத்த அறிக்கை எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களை ஜனவரியில் சந்திப்பதற்கு நான் இணங்கினேன். இதற்காகப் பல நாட்களை ஒதுக்கியிருந்தேன். இந்த யோசனைகள் பற்றி மேலும் பேச்சுவார்த்தைகள் நடத்துவதில் பயனில்லை என்று கூட்டணி தெரிவித்திருப்பதனால் அவர்களுடன் பேசி தீர்மானத்துக்கு வருவதில் பயனில்லை என்று அமைச்சரவை தீர்மானித்தது. இந்தக் காரணத்தால இந்த யோசனைகளை அமுல்படுத்துவதில்லை என்று அரசாங்கம் தீர்மானித்தது.

என்றாலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள மாவட்ட சபைகளில் காலியாக உள்ள இடங்களுக்கு தேர்தல்கள் நடத்தப்படும். மக்களினால் தெரிவு செய்யப்படுபவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவது சாத்தியமானது. அவர்கள் ஐக்கிய இலங்கையை ஏற்றுக்கொள்வார்கள். பயங்கரவாதத்தை முதலில் ஒழிக்காமல் எந்த ஒரு தீர்வையும் காண்பது முடியாத காரியம் என நான் கருதுகிறேன்'' இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற பார்வையாளர்கள் வாசையில் மகாசங்கத்தினரும், வெளிநாட்டு ராஜ்யப் பிரதிநிதிகளும், பிரமுகர்களும், மக்களும் கூடியிருந்தனர்.

### ஜீ. சி. ஈ. விசேஷ...

—1 ஆம் பக்கத் தொடர்

விண்ணப்பித்த சகல பரீட்சார்த்திகளும் தோற்ற வேண்டும்.

ஆங்கிலம் I, II, சமூகக்கல்வி I, II சுகாதாரம I II, சமயம I II, அழகியற் கல்வி I, II, தொழில நுட்பக் கலவி I, சுருக்கெழுத்து, வர்த்தகமும் கணக்கியலும I, II ஆகிய பாடங்களுக்குக் குழப்பப்பட்ட பரீட்சை நிலயங்களில் தோற்றிய பரீட்சார்த்திகள் தோற்ற வேண்டும். முறையாக நடைபெற்ற நிலையங்களில் பரீட்சை எடுக்கத் தவறிய பரீட்சார்த்திகளும் பரீட்சைக்குத் தோற்றலாம்.

இரண்டாம் மொழிப் (சிங்களம்/தமிழ் பாடம்) பரீட்சைக்குத் தோற்றத் தவறிய பரீட்சார்த்திகள் தோற்றலாம்.

நெடுந்தீவில் அமைந்த இரு பரீட்சை நிலயங்களிலும் விண்ணப்பித்த சகல பரீட்சார்த்திகளும் சகல பாடங்களுக்கும் தோற்ற வேண்டும் என்றும் திரு. சிமியாம்பிள்ளை அறிவித்துள்ளார்.

### கல்லுண்டாய்...

—1-ம் பக்கத் தொடர்

யாதவர்களால் குண்டுவைத்து சேதமாக்கப்பட்டது. இங்கு ஒரு சிலர் வந்து தங்கப்போவதாக வந்த வதந்தியால் இச்சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது.

**ST JOHN'S COLLEGE - JAFFNA**

மேற்படி கல்லூரியிலிருந்து 27ம் திகதி ஆரம்பமாகும் ஜி. சி. ஈ. (சா. த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமது பரீட்சை அனுமதி அட்டையைப் பெற 26ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தங்கள் அடையாள அட்டையுடன் என்னை வந்து சந்திக்கவும்.

அதிபர்

### காணவில்லை

சொக்கலிங்கம் குமரன். வயது 22. உயரம் 5' 1''. கறுத்த மெலிந்த உடற்கட்டு, சுருட்டைமயிர் ஒட்ட வெட்டியிருப்பார். கடந்த சில ஆண்டுகளாக மனநோயாளியாயுள்ளார். நேற்றுக் காலையிலிருந்து இவரைக் காணவில்லை வீட்டிலிருந்து புறப்பட்ட பொழுது கோடு போட்ட சிவத்தச் சாறம் மட்டும் அணிந்திருந்தார். நேற்றுப் பி. ப. 1 மணியளவில் இருபாலைச் சந்தியிற் காணப்பட்டதாகத் தெரிகிறது. இவரைக் காண்பவர்கள் தயவு செய்து இவரை நிறுத்தி வைத்துக் கொண்டு பின்வரும் முகவரியோடு தொடர்பு கொள்க. க. சொக்கலிங்கம், நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

''ஈழமுரசு'' சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 21-02-1985 வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி 23336